ஞாயிற்றுக்கிழமை, அரசு விடுமுறை நாட்களில்

# மெட்ரோ ரயில் டிக்கெட்டில் 50 சதவீத கட்டண சலுகை

## பயணிகளை கவர நிர்வாகம் நடவடிக்கை

சென்னை, செப்.12– ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொதுவிடுமுறை தினங்களில் மெட்ரோ ரயில் டிக்கெட் கட்டணத்தில் 50 சதவீத சலுகை வழங்கப்படும் என மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னையில் கடந்த 7ம் தேதி மெட்ரோ ரயில் சேவை தொடங்கியது. கொரோனா காரணமாக மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் பெட்டிகளில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அந்தவகையில், பயணிகள் ஒருவரை ஒருவர் தொடுதலை தவிர்க்கும் பொருட்டு க்யூ-ஆர் கோர்டு டிக்கெட் முறையை மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம், செல் போன் பயன்படுத்தும் பயணிகள் தங்களின் செல் போனில் மெட்ரோ ரயில் செயலில் உள்ள க்யூ-ஆர் கோர்டை பயன்படுத்தி டிக்கெட்டிற்கான கட்டணத்தை செலுத்தமுடியும்.

இதேபோல், பணமற்ற பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் வகையில் டிக்கெட் கட்டணத்தில் இருந்து 20 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும் என நேற்று அறிவித்தது.

இந்த நிலையில், அனைத்து ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடுமுறை தினங்களில் மெட்ரோ ரயில் பயண சீட்டுகளில் (வரம்பற்ற பயண அட்டை மற்றும் பலவழி பயண அட்டை தவிர) 50 சதவீத கட்டண சலுகை வழங்கப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் இன்று அறிவித்துள்ளது.

மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு நாள் தோறும் 10 ஆயிரம் பேர் வரை மட்டுமே பயணம் செய்து வருகின்றனர். மெட்ரோ ரயில் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதால் பயணிகளை கவரவே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.